**STARTING TIME 10.55 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 171/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court on 16.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **ஆனந்தா** Husband Name : பத்தவச்சலு

Address : எண். 198, ஒத்தவாடை தெரு,ஆயர்பாடி கிராமம்,
நெமிலி தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 65

**1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

16. போடி நாயுடு என்பவர் எனது மாமனார் என்றால், சரிதான். எனது மாமனாருக்கு ஆயர்பாடி கிராமத்தில் பூர்வீக சொத்துக்களும், சுயமாக சம்பாதித்த சொத்துக்களும் இருந்தது என்றால், சரிதான். எனது மாமனாருக்கு சொந்தமான சொத்துக்களின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2.79 செண்ட் என்றால், சரிதான்.

17. எனது மாமனார் உயிருடன் இருந்த வரை அவர் தான் சொத்துக்களை பராமரித்து வந்து, குடும்பத்தை நிர்வாகம் செய்து வந்தார் என்றால், அவரும் பார்த்து வந்தார், அவரது மகன்களும் பார்த்து வந்தார். எனது மாமியார் பெயர் சுப்பம்மாள் என்றால், சரிதான். எனது மாமியாருக்கும், சீனிவாச நாயுடுவின்

மனைவியான 1–ம் பிரதிவாதி வசந்தாவுக்கும் இடையே அடிக்கடி ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக 1979–ம் ஆண்டே சீனிவாச நாயுடு மனைவி மற்றும் மக்களுடன் மேலாண்டை ஒத்தவாடை தெருவில் தனிக்குடித்தனம் சென்றுவிட்டார் என்றால், சரியல்ல.

18. சீனிவாச நாயுடு குடும்பத்தை விட்டு தனிக்குடித்தனம் சென்ற பிறகு ஆயர்பாடி கிராமத்தை சேர்ந்த ஜீல் முதலியார், AGR நாயுடு என்பவர்களின் நிலங்களை குத்தகைக்கு எடுத்து பயிர் செய்து தனியே சம்பாதித்து வந்தார் என்றால், சரியல்ல. சீனிவாச நாயுடு தனியாக சம்பாதித்த வருமானத்தை கொண்டு 19.03.1983 அன்று ஆயர்பாடி கிராமத்தில் ஒத்தவாடை தெருவில் சீதாபதி மந்திரி மற்றும் ரங்க மந்திரி ஆகிய இருவரிடமிருந்து ஒரு மெத்தை வீட்டை வாங்கி, அந்த வீட்டில் அவர் வசித்து வந்தார் என்றால், சரியல்ல, அந்த வீட்டை பொது குடும்ப பணத்தை கொண்டு தான் வாங்கினோம்.

19. நான் தாக்கல் செய்த வழக்கிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ மேற்படி வீட்டை பொது குடும்ப நிதியில் இருந்து வீட்டை வாங்கி, கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக வசித்து வந்தாக சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை. சீனிவாச நாயுடு மேற்படி வீட்டில் வசித்து வந்து 07.03.1989 அன்று காலமாகிவிட்டார் என்றால், சரிதான்.

20. தாவா சர்வே எண்ணில் உள்ள மொத்த விஸ்தீரணமான ஏக்கர் 0.50 செண்ட் சொத்தை சீனிவாச நாயுடு கடந்த 07.03.1984 அன்று தனிப்பட்ட வகையில் கிரையம் பெற்றார் என்றால், சரியல்ல. சீனிவாச நாயுடு அவரது தனிப்பட்ட வருமானத்தை கொண்டு தான் மேற்படி சொத்தை கிரையம் பெற்றார் என்றால், சரியல்ல. எனவே, அந்த சொத்து கூட்டுக் குடும்ப

சொத்து என சொல்வதே தவறு என்றும், அச்சொத்தானது சீனிவாச நாயுடுவின் தனிப்பட்ட சொத்து என்றால், சரியல்ல.

21. சர்வே எண் 245/1A–ல் உள்ள 0.50 செண்ட் சொத்தை சீனிவாச நாயுடு உடன் சேர்ந்து கூட்டாக அனுபவித்து வந்ததாக சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. எனது மாமனாரின் பூர்வீக சொத்துக்கள் மற்றும் அவர் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் அனைத்தையும் பாகம் பிரித்துக்கொள்ளாமல் கூட்டாக இருந்து வருவதாக சொல்கிறேனா என்றால், ஆமாம், எந்த சொத்துக்களையும் இதுவரை பாகம் பிரித்துக் கொள்ளவில்லை, ஆனால் தனித்தனியாக அனுபவித்து வருகிறோம்.

22. எனது மாமனாரின் சொத்துக்கள் அனைத்தும் இதுநாள் வரை பாகம் பிரித்துக் கொள்ளாமல் கூட்டாக இருந்து வருவதாக எனது தாவாவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. தாவா சர்வே எண்ணில் உள்ள மொத்த விஸ்தீரணமும் சீனிவாச நாயுடுவின் தனிப்பட்ட சொத்து என்றும், அச்சொத்தினை கிரையம் பெற்ற நாளில் இருந்து அவர் தனிப்பட்ட வகையில் அனுபவித்து வந்து, அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல.

23. தாவா சர்வே எண்ணில் உள்ள 50 செண்ட் சொத்தினை சீனிவாச நாயுடு 07.03.1984 அன்று கிரையம் பெற்ற பொது எனது மாமனார் போடி நாயுடு உயிருடன் இருந்தார் என்றால், சரிதான். எனது மாமனார் போடி நாயுடு 17.10.1988 அன்று காலமானார் என்றால், சரிதான். எனது கணவரின் முத்த சகோதரரான கோவிந்தராஜ் நாயுடு கடந்த 23.10.1977 அன்று

காலமானார் என்றால், சரிதான். எனது கணவர் பக்தவச்சல நாயுடு எந்த தேதியில் காலமானார் என்ற விவரத்தை தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால், நினைவில் இல்லை.

24. கோவிந்தராஜ் நாயுடு காலமான பிறகு அவரது வாரிசுகள், எனது கணவர், என் கணவரின் சகோதரர்களான சீனிவாச நாயுடு, மணி நாயுடு, எனது மாமனார் மற்றும் மாமியார் ஆகியோர் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தோம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. அதே போல் சீனிவாச நாயுடு காலமான பிறகு அவரது வாரிசுகளும் மற்றவர்களும் கூட்டாக வசித்து வந்தோம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

25. எனது மாமனார் போடி நாயுடு காலமான பிறகு அவருக்கு சொந்தமான சொத்துக்கள் அனைத்தும் கூட்டாக இருந்து வருவதாக சொல்கிறேனா என்றால், ஆமாம். சீனிவாச நாயுடு கிரையம் பெற்ற சொத்தும் கூட்டாகவே இருந்து வருவதாக சொல்கிறேனா என்றால், ஆமாம். எனது தாவாவில் 1990–ம் ஆண்டு ஒரு வாய்சொல் பாகம் நடந்ததாக சொல்லியுள்ளது சரியா, தவறா என்றால், அது தவறாகும்.

26. எனது தாவாவில் போடி நாயுடுவின் வாரிசுகள் அனைவருக்கும், எவ்வளவு சொத்துக்கள் பாகம் ஒதுக்கப்பட்டது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால், சரிதான். எனது மாமனார் போடி நாயுடுவிற்கு சொந்தமான ஏக்கர் 2.79 செண்டில் மட்டும் தான் போடி நாயுடுவின் வாரிசுகள் அனைவருக்கும் உரிமை என்றும், சீனிவாச நாயுடு சுயமாக சம்பாதித்த தாவா சர்வே எண்ணில் உள்ள சொத்தில் எவ்வித உரிமையும் எங்களுக்கு இல்லை என்றால், சரியல்ல.

27. தாவா சொத்து எங்களுக்கு பாகம் என்றும், அதற்கு மேற்கில் உள்ள சொத்து பிரதிவாதிகளுக்கு பாகம் என்றும், அதற்கும் மேற்கில் உள்ள சொத்து கோவிந்தராஜ் நாயுடுவின் வாரிசுகளுக்கு பாகம் என்று சொல்லியுள்ளது பொய் என்றால், சரியல்ல. நான் சொல்வது போல் தாவா சொத்துக்களை பிரித்துக் கொண்டாக சொல்வதற்கு எழுத்து மூலமாக ஆவணம் எதுவும் எழுதிக் கொள்ளப்பட்டதா என்றால், இல்லை, சீனிவாச நாயுடு உயிருடன் இருந்த போதே அது போல் பிரித்துக் கொடுத்துவிட்டார். அது போல் சீனிவாச நாயுடு பிரித்துக் கொடுத்ததை ஆவணமாக எழுதிக் கொடுத்தாரா என்றால், எழுதிக் கொடுத்தார். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை தெரியும் என்றால், சரிதான்.

28. தாவா சர்வே எண்ணில் உள்ள சொத்தினை பொறுத்து 1 முதல் 4, 6 பிரதிவாதிகள் சேர்ந்து 5-ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு பொது அதிகாரப் பத்திரம் எழுதிக் கொடுத்து அதன் அடிப்படையில் 5-ம் பிரதிவாதி பொது அதிகாரம் பெற்ற சொத்தினை கடந்த 10.02.2011 அன்று 7-ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல, மீண்டும் சாட்சி கிரையம் பெற்றார் என்று சொல்கிறார். 10.02.2011-ம் தேதியில் இருந்து 7-ம் பிரதிவாதி தான் அவர் கிரையம் பெற்ற சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால், சரிதான்.

29. 07.09.2011 அன்று 5-ம் பிரதிவாதி தவறான செக்குபந்தியை குறிப்பிட்டு ஒரு வேல்முருகன் என்பவருக்கு தாவா சர்வே எண்ணில் 12-1/2 செண்ட் சொத்தை கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லியுள்ளது பொய் என்றும், 1 முதல் 6 வரை பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமான சொத்தை தான் கிரையம் செய்துக் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல.

30. அதேபோல் வா.சா.ஆ.4 கிரையப் பத்திரத்தில் உள்ள ஒரு சொத்தில் மேற்கு செக்குபந்தியில் எனக்கு சொந்தமான நிலம் இருப்பதாக சொல்லியுள்ள வகையிலும் தாவா சொத்து எங்களுக்கு சொந்தமானது என சொல்லியுள்ளது பொய் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.4 கிரையப் பத்திரத்தில் உள்ள தவறான செக்குபந்தியின் மூலம் தாவா சொத்தில் நாங்கள் எவ்வித உரிமையும் கேட்க இயலாது என்றால், சரியல்ல.

31. தாவா சொத்தை நாங்கள் அனுபவித்து வருவதற்கு ஆதரமாக வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால், இல்லை. கடந்த 25.02.2012 அன்று தாவா சொத்தை நாங்கள் அனுபவித்து வருவதற்கு பிரதிவாதிகள் இடையூறு செய்ததாக சொல்லியுள்ளது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால், சரியல்ல.

32. சீனிவாச நாயுடு கடந்த 07.03.1984 அன்று கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தின் அசல் ஆவணத்தை எடுத்து வைத்துக் கொண்டு தாவா சொத்தில் எங்களுக்கு உரிமையிருப்பதாக தவறாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லாததால் நாங்கள் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் எங்களுக்கு கிடைக்கதக்கதல்ல என்றால், சரியல்ல.

33. தாவா சொத்தை நாங்கள் தொடர்ந்து அனுபவித்து வரும் வகையில் தாவா சொத்தில் எங்களுக்கு அனுபவ பாத்திய உரிமை ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால், சரியல்ல. தாவா சொத்தை நாங்கள் எந்த காலத்திலும் அனுபவித்து வந்ததில்லை என்றால், சரியல்ல. எங்கள் வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவைகள் என்றால், சரியல்ல. எனவே,

நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

7–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME 11.57.A.M.**

YUVARAJ
Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.09.16 16:37:27 +0530